Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -01 17-11-2003 திங்கட்கிழமை ஓசை 272

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், படம் பிறேம் செய்தல் அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்

யாழ் சாலை, கிளிநொச்சி. (கி-8689)

R.V. பந்தல்சேவை தர்மபுரம்.

### சனாதிபதி சந்திரிகா – பிரதமர் ரணில்

# விட்டுக் கொடுக்கத் தயாரில்லை;

# திடீர்த் தேர்தலுக்கே வாய்ப்பதிகம்!

## அரசியல் அவதானிகள் மட்டத்தில் அபிப்பிராயம்

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தத்தமது நிலைகளில் இருந்து விட்டுக் கொடுப்புச் செய்யவோ இறங்கிச் செல்லவோ தயாராக இல்லை. இதனால் திடீர் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பே அதிகமாக உள்ளதென அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.**

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ள சனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு இறங்கி அவ் அமைச்சுக்களை மீள ஒப்படைக்கும் நிலையில் இருப்பதாக இல்லை. இரு தடவைகள் பிரதமர் சனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோதிலும் இவ்விடயத்தில் முன்னேற்றம் எதுவும் காணப்படவில்லை. அமைச்சுப் பதவிகளைத் திருப்பி ஒப்படைக்கப்படமாட்டாது என சந்திரிகா தெளிவாகவே கூறியுள்ளார். இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனா

(8ஆம்பக்கம் பார்க்க...)

## யுத்தநிறுத்த உடன்படிக்கையை சரியாக அமுல் செய்ய முயல்க

### - லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல

யுத்தநிறுத்த உடன்படிக்கையை சரியாக அமுல்செய்வதற்கு இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி லயனல் பலகல்ல சகல ஆயுதப்படை அதிகாரிகளுக்கும் கூறியுள்ளார்.

இவர் வட-கிழக்கிலுள்ள சகல கட்டளையிடும் அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள பணிப்புரையில் மேலும் கூறுகையில், யுத்தநிறுத்த உடன்படிக்கையைஎவ்வித தடங்கலும் இன்றி அமுல் செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு கூறியுள்ளார் என இராணுவப் பேச்சாளர் சுமேத்த பெரேரா தெரி

(8ஆம்பக்கம் பார்க்க...)

### - பாதுகாப்புஅமைச்சை ரணிலுடன் -

## பகிர்ந்து கொள்ளப்போவதாக வந்த செய்திக்கு சந்திரிகா மறுப்பு

பாதுகாப்பு அமைச்சின் சில அதிகாரங்களை சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பகிர்ந்து கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராக இருப்பதாக வெளிவந்த செய்தியை சந்திரிகா குமாரதுங்க மறுத்துள்ளார்.

இது குறித்து சனாதிபதியின் பேச்சாளர் ஜனதாச பீரிஸ் கருத்துக் கூறுகையில் பாதுகாப்பு அமைச்சுக்கும் பிரதமரின் சமாதானச் செயலகத்திற்கும் இடையே இணைப்பை ஏற்படுத்த குழு ஒன்றை அமைப்பது குறித்தே சனாதிபதி ஆலோசனை தெரிவித்ததாக அவர் தெரிவித்தார்.

(8ஆம்பக்கம் பார்க்க...)

## சர்வதேச ராஜதந்திர அழுத்தங்கள் சனாதிபதி, பிரதமர் மீது அதிகரிப்பு

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர் சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக வெளியேறியதைத் தொடர்ந்து சனாதிபதி மீதும் பிரதமர் மீதும் சர்வதேச இராஜதந்திர அழுத்தம் முழுமையாகப் பிரயோகிக்கப்பட்டு வருகிறது என பி.பி.ஸி.க்கு கொழும்பு செய்தியாளர் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வந்த அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் சனாதிபதி மீது சற்று காட்டமாகவே இருக்கின்றன போல் தெரிகிறது. இருந்தும் இது குறித்து இந்தியாவின் உண்மையான நிலைப்பாடு தெரியவில்லை.

இந்நிலையில், இராஜதந்திர அழுத்

(8ஆம்பக்கம் பார்க்க...)

## 19 ஆம் திகதி பாராளுமன்றம் கூடுமுன் ரணில்–சந்திரிகா சந்திக்க வாய்ப்பில்லை!

(லண்டன்)

வரும் புதன்கிழமை பாராளுமன்றம் கூட்டப்படுவதற்கு முன்னர் பிரதமர்-சனாதிபதி சந்திப்பிற்கு வாய்ப்புக் குறைவாகவே உள்ளது என பி.பி.சி.தமிழோசையின் கொழும்புச் செய்தியில் கருணாகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் ரணில் விக்கிரமசிங்க தமது பெரும் பான்மையை மீண்டும் ஒருதடவை உறுதிப்படுத்தியபின்னர் பலமான ஒரு நிலையில் நின்று கொண்டு சனாதிபதியுடன் பேச்சு நடத்தவே பிரதமர் விரும்புகிறார். இதற்கான ஏற்பாடுகளையே அரசாங்கத் தரப்பினர் மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்

(8ஆம்பக்கம் பார்க்க...)

## இல. நிலவரம் குறித்து கண்காணிப்புடன் இந். ராணுவத்தை இருக்குமாறு பணிப்பு!

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வே வெளியேறியதைத் தொடர்ந்து இலங்கை விவகாரத்தில் கண்காணிப்புடன் இருக்குமாறு இந்திய இராணுவத் தலைமைக்கு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இந்தியாவிற்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நிகழ்வுகள் ஏதும் நடந்தால் அதற்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் இராணுவத்தைத் தயார் நிலையில் இருக்குமாறும் இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்திய இராணுவ அதிகாரியான ஜெனரல் சந்தோனு சவுத்திரி தெரிவிக்கையில், ஐக்கிய இலங்கையால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. ஆனால், இலங்கை நிகழ்வுகள் மீதான எமது அவதானிப்

(8ஆம்பக்கம் பார்க்க...)

## வன்னியில் தொடர் மழையினால் வெள்ளப் பெருக்கு அபாயம்

(அலுவலக செய்தியாளர்)

தற்போது வன்னிப்பெருநிலப் பரப்பெங்கும் பரவலாகப் பெய்துவரும் தொடர் மழை காரணமாக தாழ்வு இடங்களில் அமைந்துள்ள குடியிருப்புக்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

பெருமழைகாரணமாக நேற்றுநண்பகல் முதல் போக்குவரத்து வீதிகளை ஊடறுத்து வெள்ளம் பாய்வதுடன் கால போக நெற்செய்கை வயல் நிலங்கள் யாவும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதனை காணக் கூடியதாகவுள்ளது.

மேலும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் பல வீதிகளின் போக்குவரத்துத் தடைப்படும் சூழ்நிலை

(8ஆம்பக்கம் பார்க்க...)

## புலிகள் கேட்பதையெல்லாம் கொடுக்கும் சமாதானம் இலங்கைக்குத் தேவையில்லை

### - சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

இதுவரை பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் போரில் ஊனமடைந்துள்ளனர். அல்லது கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் தியாகத்திலேயே சமாதானம் கிடைத்துள்ளது என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

நேற்று கண்டியில் ஊனமுற்ற படைவீரர்களின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தெரிவித்துள்ளார்.

இவ்வாறாக இப்படைவீரர்களின் தியாகத்தால் வந்த சமாதானத்தை விடுதலைப்புலிகள் கேட்பதை எல்லாம் கொடுத்தால் அது சமாதானமாகாது. அவ்வாறான சமாதானம் இலங்கைக்குத் தேவையில்லை.

இலங்கையின் இறைமையைப் பாதுகாக்கும் வகையில் ஒரு சமாதானம் ஏற்பட வேண்டும். அந்தச் சமாதானத்தை ஏற்படுத்தவே தான் செயற்பட விரும்புவதாகவும், இந்த நிலையில் தன்மீது சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல சுமத்தப்பட்டுள்ள ஒரு பொறுப்பு தன்னால் நிறை

(8ஆம்பக்கம் பார்க்க...)

## வடக்கு, கிழக்கில் இன்றும் மழை தொடர்ந்து பெய்யும்

### – சிறில. வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு, வடமத்திய, தெற்கு, ஊவா மாகாணங்களில் இன்றும் மழை பெய்யும் என்று சிறிலங்காவின் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிலவேளைகளில் இடியுடன் பலத்த காற்றும் வீசக்கூடும். மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவும். இன்று பிற்பகல் வேளை மழை கூடுதலாகப் பெய்யும்.

தென்கிழக்கு அரேபியக் கடலில் தோன்றியுள்ள காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையில் இந்தக் காலநிலை நிலவுகிறது.

மேற்கு, தென்மேற்குக் கடல் பிரதேசம் கொந்தளிப்பாக இருப்பதுடன் பலத்த காற்றும் வீசும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மாவீரர் நாள் நவம்பர்-27

**எமக்கு ஒரு நாடு வேண்டும்- எமது மக்களுக்கு விடுதலை வேண்டும் - எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் - என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே, மாவீரர்கள் களத்தில் விழுகின்றார்கள்; எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.**

## வரி விளம்பரம்


### விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் C.D. 185 மலிவு விலையில் MD 90, ELF 250 வான்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு அறிவமுது பொத்தகசாலை, யாழ். சாலை, கிளிநொச்சி. (3877)


### பகுதி நேர ஆசிரியர்கள் கவனத்திற்கு!

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பணி புரிந்து வந்த சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்திற்கு தவறாது சமுகம் தருமாறு கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் கேட்டுக் கொண்டுள்ளார். (சோ)

## வன்னியில் வெள்ளப்பெருக்கு



## பருத்தித்துறை கூ.ச. அலுவலகத்தின் திறப்பு விழாவுக்குச் சென்றவிருந்தினரை அனுமதிக்கப் படையினர் மறுப்பு

புதிதாக அமைக்கப்பட்ட பருத்தித்துறை கூட்டுறவுச்சங்க அலுவலகத் திறப்பு விழாவிற்குச் சென்ற விருந்தினர்கள் இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருகையில், பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள இக் கூட்டுறவுச் சங்கத்தின் காணியில் 8.6 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடமாகத் தலைமை அலுவலகம் ஒன்று தற்போது நிறுவப்பட்டுள்ளது.

கட்டி முடிக்கப்பட்ட இவ் அலுவலகத்தை வைபவ ரீதியாக கடந்த வெள்ளியன்று திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற விருந்தினர்களே படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். நிகழ்வில் கலந்து கொள்ளவிருந்த விருந்தினர்களது விபரங்கள், குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ள 524 ஆவது இராணுவப் பிரிவின் படைத் தலைமையிடம் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருந்தது. ஆயினும் உரிய முன் அனுமதி பெறாத விருந்தினர்களை தாங்கள் உள்ளே அனுமதிக்க முடியாதென சோதனைச் சாவடியில் இருந்த படையினரால் தெரிவிக்கப்பட்டது.

விருந்தினர்களை உள்ளே நுழைய அனுமதிக்கும் விடயத்தில் படையினர் விட்டுக் கொடுக்க மறுத்த நிலையில், இவ்விடயம் தொடர்பாக சங்கத்தின் தலைவர் நா. சிவஞானசுந்தரம் தலைமையிலான பணிப்பாளர் சபை 524 ஆவது படைப் பிரிவின் தலைமையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தது. சுமுகமாக திறப்பு விழாவை நடத்த படைத் தரப்பு ஒத்துழைக்காவிடின் நிகழ்வைப் பகிஷ்கரிக்கப்போவதாகவும் அவர்கள் அறிவித்திருந்தனர்.

இதையடுத்தே விருந்தினர்களை நிகழ்வில் கலந்து கொள்ள படையினர் அனுமதி வழங்கினர். இதையடுத்து திறப்பு விழா நிகழ்வுகள் சுமுகமாக இடம்பெற்றன.

## கண்ணிவெடியகற்றல் குறித்து கண்காணிப்புக்குழு விசாரணை

பருத்தித்துறை கற்கோவளம் பிரதேசத்தில் படையினரால் கைவிடப்பட்ட அரணை அண்மித்த பகுதியிலிருந்த மிதிவெடியகற்றுதல் சம்பந்தமான விடயத்தில் படையினருக்கும் மக்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள முறுகல்நிலை தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் மக்களின் மீள்குடியமர்வினைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட மிதிவெடியகற்றும் நடவடிக்கைக்கு படையினர் மேற்கொண்ட கெடுபிடிகளும் அதனால் ஏற்பட்ட பீதிநிலைகள் சம்பந்தமாக அப்பகுதி மக்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து கடந்த வெள்ளி அப்பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர் படையினர் இது விடயத்தில் நடந்துகொண்ட முறைமை தொடர்பாக விளக்கம் கோரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (33)

### -வடமராட்சி வடக்கில்-
## மாவீரர்களின் நினைவாக சவுக்கு நடுகைத் திட்டம்

(யாழ்)

வடமராட்சிப்பகுதியில் மாவீரர்கள் நினைவாக சவுக்குமர நடுகைத் திட்டம் ஒன்றை வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கசமாசம் நடைமுறைப்படுத்தவுள்ளதாக அதன் செயலாளர் எஸ். சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

மாவீரர் தினத்தை ஒட்டி எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரைநடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தின் போது வடமராட்சி வடக்கு பகுதிகளில் 2000 இற்கு மேற்பட்ட சவுக்குமரங்கள் நடுகை செய்யப்படவுள்ளதாகவும், இவ்வாறான மரநடுகைக்கான சவுக்கு மரங்கள் ஒவ்வொரு பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களூடாக மாவீரர் குடும்பங்களிற்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (33)

## சான்றிதழை பெற்றுக்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளி. மாவட்ட செயலக மோட்டார் வாகன உதவி ஆணையாளர் செயலகத்தில் கடந்த 5ஆம் திகதி முதல் இதுவரை பதிவில்லாத உந்துருளி (மோட்டார் சைக்கிள்) களுக்கான பதிவினை மேற்கொண்டோர் பதிவிற்கான சான்றிதழ்களை எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் மோட்டார் வாகன உதவி ஆணையாளர் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித்துள்ளார். அத்துடன் அன்றைய தினங்களில் உந்துருளிகளுக்கான காப்புறுதி செலுத்தும் நடவடிக்கைகளும் மேற்படி செயலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (சோ)

### -யாழ். சூரியவெளிப் பகுதியில்
## இடம் பெயர்ந்தோர் குடிசைகளில் கடல்நீர் புகும் அபாயநிலை

(யாழ்)

தற்பொழுது தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக சூரிய வெளி பிரதேச அகதிமுகாம் மக்களின் தற்கால குடிசைகளுள் கடல்நீர் உட்புகும் அபாயம் தோன்றியுள்ளது.

யாழ்நகரின் மேற்குப் புறமாகவுள்ள நாவாந்துறை கரையை அண்மித்துள்ள சதுப்பு நிலத்தில் படையினரின் பாதுகாப்பு வலய நடைமுறையால் மீள் குடியமர முடியாத 200 குடும்பங்கள் சேர்ந்த 1000 பேர் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்ற நிலையில்,

தற்போது தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக கடல் பெருக்கு ஏற்பட்டு இச்சதுப்பு நிலம் நோக்கி நீர் செல்லத்தொடங்கியிருப்பதால் இவ் அபாயநிலை தோன்றியுள்ளது.

இதேவேளை இப்பகுதியைச் சேர்ந்த சிறுவர்களுக்கு வாந்திபேதி போன்ற அபாயகரமான தொற்று நோய் பரவும் நிலையும் தோன்றியுள்ளது. (33)

### - மாணிக்ககங்கை நீர்மட்டம் அதிகரிப்பு -
## கதிர்காமம், செல்லக்கதிர்காமம் நீரில் மூழ்கும் அபாயநிலை

மாணிக்க கங்கை நீர்மட்டம் அதிகரித்துள்ளதனால் கதிர்காமம் செல்லக்கதிர்காம ஆலயம் முழுமையாக நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த வெள்ளப பெருக்குக் காரணமாக அதிகளவு பக்தர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது அப்பகுதியில் பெரும் மழை பெய்து வருவதனால் நீர்மட்டம் விரைவாக அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடும் மழை காரணமாக மாணிக்க கங்கையின் நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் என்றும் மக்கள் அவதானமாக இருக்குமாறும் கதிர்காமப் பொலிசார் கேட்டுள்ளனர்.

## வீதியை மூடி வெள்ளம் பாய்கிறது

(முல்லைத்தீவு)

சில நாட்களாக பெய்துவரும் மழையினால் முல்லை, புதுக்குடியிருப்பு, கேப்பாப்பிலவு, முள்ளியவளை வீதியில் பல இடங்களில் வீதியை மூடி வெள்ளம் பாய்கின்றது.

இதனால் தொழில்களுக்குச் செல்பவர்கள் ஏனைய பாதசாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் வீதிகள் சில திருத்தப்பட்டபோதும் சரியான இடங்களில் பாலம் அமைக்கப்படவில்லை. (20)

## கல்விமேம்பாட்டுப் பேரவை யாழ்.வலயத்தில் ஆரம்பம்

கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ்.வலயத்துக்கான வலயக்கல்வி மேம்பாட்டுப் பேரவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழக யாழ்.மாவட்ட பொறுப்பாளர் கவியன்பன் பேரவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இந்நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எழிலன்பன் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பஞ்சலிங்கம் ஆகியோர் உட்பட யாழ்.கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள், பெற்றோர் பாதுகாவலர், சங்கத்தின் பிரதி நிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள பின் தங்கிய கிராமங்களில் வசித்துவரும் மாணவர் சமூகத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்குரிய புதிய திட்டங்களைத் தமிழீழக் கல்விமேம்பாட்டுப்பேரவையின்யாழ். அலுவலகம் அமுல்ப்படுத்தவுள்ளது.

அடுத்த ஆண்டில் இருந்து இடம் பெறவுள்ள இம்மேம்பாட்டு நடவடிக்கையில் பொருளாதார நிலையாலும் ஏனைய குறைபாடுகளாலும் தம் கல்வியைத் துறந்து வசித்து வரும் இம்மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற் கொண்டு அமுலாகவுள்ள இத்திட்டங் களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழீழக்கல்விக் கழகமும் உற்ற துணையாகச் செயற்படும் என தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் தெரிவித்தார். (33)

## கரைதுறைப்பற்று பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

கரைதுறைப்பற்று பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் கட்டாக்காலிநாய் ஒழிப்பு நேற்று ஆரம்பமானது.

இதன் முதற்கட்டமாக முல்லைப்பிரதேசத்தில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து சகலபகுதிகளிலும் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடைபெறும் எனவும் கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடதக்கது.(20)

## 50 விவசாயிகள் மிதிவெடியால் பாதிப்பு

வலி.வடக்கின் கரகம்பானைப் பகுதியிலுள்ள பாதுகாப்பு வலய வேலிகளுக்கு வெளியே உள்ள விவசாயக் காணிகளில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்ற படைத்தரப்பு மறுத்து வருவதால் 50இற்கு மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள இப்பிரதேசத்திலுள்ள மிதி வெடிகளை அகற்றி பயிர்ச் செய்கைக்குரிய அனுமதியைத் தருமாறு இப்பகுதி மக்கள் பல தடவை படைத் தளபதிகளுக்கு விளக்கிக்கூறியும் இது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததைத் தொடர்ந்தே இப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (33)


## துயர் பகிர்கின்றோம்

## முத்து கனகம்மா

எமது கமநல கேந்திர நிலையத்தின் எழுதுவினைஞர் திரு. முத்து சிவமோகன் அவர்களின் அன்புத் தாயார் முத்து கனகம்மா அவர்கள் 18 – 10 – 2003 அன்று சிவபதமடைந்தார். இவரின் மறைவையொட்டித் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருடன் நாமும் எமது துயரினைப் பகிர்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர்,**
**கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**கமநல சேவைகள் குழு அங்கத்தவர்,**
**பணியாட்கள்,**
**கமநல கேந்திர நிலையம்,**
**புளியம்பொக்கணை.** (3878)

# அமெரிக்க பிளக் ஹொக் உலங்கு வானூர்திகள் ஏவுகணைத் தாக்குதலால் வெடித்துச் சிதறின!

## 12 படையினர் பலி, 9 பேர் காயம்

ஈராக்கில் நேற்று முன்தினம் மாலை இரு அமெரிக்க பிளக் ஹொக் உலங்கு வானூர்திகள் வெடித்துச் சிதறியதில் இவற்றில் பயணம் செய்த 12 பேர் பலியாகினர் மேலும் 9 பேர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் மொசூல் நகர வான் பரப்பில் இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது; கெரிலாக்கள் ஏவுகணை கொண்டு உலங்கு வானூர்தி ஒன்றை தாக்கினர் அவ்வேளை அதன் வால் பகுதியில் தாக்கப்பட்டு அருகில் சென்றுகொண்டிருந்த மற்றைய உலங்கு வானூர்தி மீது மோதிக்கொண்டது இதனால் இரண்டு உலங்கு வானூர்திகளும் நடுவானில் வெடித்துச் சிதறின.

அமெரிக்காவின் 101 வது படைப்பிரிவைச் சேர்ந்த இந்த இரு உலங்கு வானூர்திகளுடன் இம் மாதத்தில் 4 உலங்கு வானூர்திகள் அமெரிக்கப் படையினர் இழந்துள்ளனர். இதில் ஒன்று சினோக் ரகம் மற்றையது பிளக் ஹொக் ரகத்தைச் சேர்ந்தவையாகும்.



ஈராக்கில் அமெரிக்கத் தலையீட்டைக் கண்டித்து வடக்கு இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்க சனாதிபதி புஷ்சின் உருவந்தாங்கிய ஆர்ப்பாட்டக் காரருக்கருகில் நிற்கும் பிரிட்டிஷ் பொலிசார்.



துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற்ற கார் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஒருவரின் நாடித்துடிப்பை அவதானிக்கும் மருத்துவர்.

# இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்க நல்லெண்ண சமிக்ஞை!

## தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தவும் நிர்ப்பந்தம்

**இஸ்ரேல்-பலஸ்தீன சமாதானப் பேச்சுகள் விரைவில் ஆரம்பமாவ தற்கான சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இருதரப்பும் இதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப் படுத்தியுள்ளன.**

பலஸ்தீனப் பிரதமர் அகமது கூரி இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சில்வன் சலோமை சந்தித்துப் பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். பிரதமர் அகமத் கூரி தலைமையிலான புதிய அரசு கமாஸ் மற்றும் தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் இதுவே பலஸ்தீனத்தை சமாதானத்தின் உண்மையான பங்காளிப்பாகும் என இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் வலியுறுத்திக் கூறியுள்ள போதிலும், பேச்சை மீண்டும் தொடர இஸ்ரேல் தயாராகி வருவதாக கூறியுள்ளார்.

இஸ்ரேலின் நிலைப்பாட்டினால பலஸ்தீனப் பிரதமர் தீவிரவாத இயக்கங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க பிரதமர் கூரிக்கு அனுமதியளித்துள்ளார். இரண்டு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக இருந்து வரும் பகைமையை நீக்கவும் இரத்தக் களரியை நிறுத்துவதற்கும் இது நல்ல சந்தர்ப்பம் என்றும் அரபாத் குறிப்பிட்டுள்ளார்.

# துருக்கியில் நடந்த இரு குண்டுவெடிப்புகளுக்கு அல்-ஹைதாவே காரணமென சந்தேகம்!

துருக்கியில் நேற்று முன்தினம இரண்டு வழிபாட்டுத் தலங்களில் ஒரே நேரத்தில் குண்டுகள் வெடித தமைக்கு ஒசாமா பின்லேடனின் அல்-ஹைதா இயக்கமே காரணமாக இருக் கலாம் என துருக்கிய அதிகா ரிகள் கூறியுள்ளனர்.

இச் சம்பவம் தன்னை அதிர்ச் சியடையச் செய்து ள்ளதாக ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் கூறியுள்ளார்.

அத்துடன் இச் சம்பவம் குறித்து துருக்கியும் இஸ்ரேலும் கூட்டாக விசாரணைகளை ஆரம் பித்துள்ளன. துருக்கி இஸ்ரேலுடனும், அமெரிக்காவுடனும் நெருங்கிய சகாவாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேட்டோ அமைப்பில் அங்கத் துவம் வகிக்கும் துருக்கியின் நீண்ட கால அரசியல் வன்செயல் வரலாற்றில் இத்தாக்குதல் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென துருக்கியின் பிரதம மந்திரி தெரிவித்துள்ளார். துருக்கியில் இடம்பெற்ற இரு கார்க் குண்டு வெடிப புக்களில் 23பேர் பலியாகியதோடு இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தமை தெரிந்ததே.



# "பொடோ" விற்கு விளக்கமளிக்க தமிழக அரசுக்கு உத்தரவு

பொடோ சட்டம் தொடர்பாக விளக்கமளிக்குமாறு தமிழக அரசிற்கு பொடோ சட்ட மறு ஆய்வுக் குழு உத்தரவு பிறப்பித்துள்ளது. பொடோ சட்டம் தவறாகப்பயன்படுத்தப்பட்டு வருவதாக முறையிடப்பட்டதைத் தொடர்ந்து இதனை மீளாய்வு செய்ய மத்திய அரசு உத்தரவு பிறப பித்தது. அத்தோடு இதற்கு அதிக அதிகாரங்களும் வழங்கப்பட் டுள்ளமை தெரிந்ததே. இந்நிலையில் தமிழக அரசிடம் பொடோ சட்டம் பயன்படுத்தும் விதம் குறித்து விளக்கமளிக்கும்படி இந்தக் குழு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்த விளக்கத்தை தமிழக அரசு எதிர்வரும் டிசம்பர் 2ஆம் திகதிக்கு முன் அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்காவிடில் ஏற்கனவே உள்ள ஆவணங்களின் அடிப்படையில் பொடோ சட்டம் குறித்து விசாரணை நடத்தி தீர்ப்புக் கூறப்படும் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# குயின் மேரி-2 விபத்து; 13 பேர் பலி!

உலகின் மிகப் பெரிய கப்பலான குயின் மேரி-2 நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால் இதில் பயணம் செய்த 13பேர் உயிரிழந்ததுடன் 31பேர் காயமடைந்துள்ளனர். 80 கோடி டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட இக்கப்பல் இது வரை தயாரிக்கப்பட்ட கப்பலகளில் மிகவும் பெரிய பயணிகள் கப்பலாகும். மேற்கு பிரான்சில் அதிக விலை மதிப்புள்ள பிரயாணக்கப்பல் இதுவென் பதும் குறிப்பிடத்தக்கது. இக்கப்பலுக்குச் செல்லும் படி உடைந்த போதே விபத்து நேரிட்டது.

# அமெரிக்காவின் ஈராக் கொள்கையில் விரைவில் மாற்றங்கள் ஏற்படும் அறிகுறி

அமெரிக்கா அதன் ஈராக் கொள்கையில் மாற்றத்தை ஏற்ப டுத்துவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

தனது நாடு பல்லினசமூதாயத் தையும், சனநாயகத்தையும் ஊக்குவிப்பதற்கான முக்கிய நடவடிக்கையை மேற்கொண் டுள்ளதென சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படைகளின் உயிரிழப் புக்கள் அதிகரித்துவருகின்ற இவ் வேளையில் அமெரிக்கா வில் முக்கிய கொள்கைமாற்றம் ஏற்படுவதை காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் புதிய அரசியல் அமைப்பு சட்டமொன்றை தயாரிக்க வேண்டுமெனவும், அமெரிக்கா ஈராக்கிய மக்களிடம் அதிகாரத்தை கையளிப்பதற்கு முன்னர் தேர்தல்களை நடத்த வேண்டுமெனவும் வலியுறுத்திவந்த புஷ் நிர்வாகம் இப்போது அவற்றைக் கைவிட்டுள்ளது.

# இந்திய நிலைப்பாட்டிற்கு சிரிய அரசு பாராட்டு

(டமாஸ்கஸ்)

மேற்காசியா மற்றும் ஈராக் தொடர்பாக இந்தியா எடுத்துள்ள கொள்கையை சிரியா பாராட்டியுள்ளது.

இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்த்து நிலையான தன்மை ஏற்பட வேண்டுமெனவும் அந் நாடு கூறியுள்ளது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உறவுகளை இயல்பாக்கவும், இந்தியா மேற்கொண்டுள்ள சமாதான முன் முயற்சிகளைப் பெரிதும் தான் மதிப்பதாக சிரிய சனாதிபதி கூறியுள்ளார். சிரியா மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலை இந்தியா கண்டனம் செய்ததையும், ஈராக்கிய மக்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கியதையும் அவர் புகழ்ந்துள்ளார். இஸ்ரேலின் நடவடிக்கைகளைக் கடுமையாக எச்சரித்த அவர், ஈராக்கில் ஆக்கிரமிப்பு முடியவேண்டு மெனவும் கூறி யுள்ளார்.


சிரியாவின் தலைநகரில் பிரதமர் வாஜ்பாயிற்கு விருந்தளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## தடையுத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் புதிய பெயர்களில் தலைதூக்கியுள்ள 03 பயங்கரவாத அமைப்புக்களை அரசு தடைசெய்துள்ளது.

சனாதிபதி முஷாரப், பிரதமர் ஸமருல்லாகான் ஜமாலி போன்றோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளது.


புதுடில்லியில் உள்ள 23ஆவது சர்வதேச வர்த்க சந்தையில் மணலினால் செய்யப்பட்ட சிலைக்கு மெருகு ஊட்டும் இந்திய சிற்பி சுமித்ராராணி பல சர்வதேச உள்நாட்டு, கலைஞர்கள் கண்காட்சியில் பங்கு கொண்டனர்.

# தூங்கிக்கிடந்த ஐ. தே. க. பா. உ.க்களுக்கு பிராணவாயு கொடுத்துள்ளார் சந்திரிகா

அமெரிக்கா நேரம் இரவு 1.40 அமெரிக்கா வாஷிங்டன் ரீட்ஸ் ஹோட்டல் அரச உயர் பிரமுகர்கள் தங்கும் இடம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க புலனாய்வுதுறையினரின் உயர் பாதுகாப்புக்கு மத்தியில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவர் அன்று நல்ல நித்திரையில் இருந்தார். தொலைபேசியின் சத்தத்தால் அவர் அவசரமாகப் படுக்கையிலிருந்து எழும்பி தொலைபேசியைக்கையில் எடுத்தார்.

வருக்கு உரித்தான நிலையில் நடந்து கொண்டுள்ளதை அங்கு உள்ளவர்கள் உணர்ந்து கொண்டனர். ஏனெனில் நாட்டில் இப்படி ஒரு பிரச்சினை வரும் பொழுது எந்தத் தலைவரும் தனது நாட்டிற்கு உடனடியாகத் திரும்புவதே வழக்கம். ஆனால் இவர் இச்சம்பவத்தைப் பொருட்படுத்தாமல் எப்பொழுதும் நடந்து கொள்வதைப்போல் சாதாரணமாகவே நடந்துகொண்டார்.



"அடுத்தமுனையிலிருந்து உள்துறை ஊடகவியல் பாதுகாப்பு அமைச்சு போன்றவைகளை சனாதிபதி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளார். என்ற அறிவித்தல் கிடைத்தது. வேறு ஒருவர் அந்த இடத்தில் இருந்தால் அமெரிக்க அதிபரையும் சந்திக்காமல் உடனடியாக அமெரிக்க ஜெட்விமானமூலம் இலங்கை வந்திருப்பார்.

ஏனெனில் அமெரிக்காவில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நிமிடமும் தனக்கும் தனது அரசுக்கும் ஆபத்து உண்டாகும். தனது அரசுக்கும் மற்றும் தனது அமைச்சர்களுக்கும் என்ன நடக்கும்?என்ற பயப்பீதியில் இருந்திருப்பார்.அவர் அமெரிக்காவில் தங்கி இருந்த 72 மணித்தியாலங்களும் அவரின் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத நேரமாகவும் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாததொரு மனதை ஒரு நிலைப் படுத்தமுடியாத நேரமாகவும் அமைந்திருக்கும் .

ஆனால் எல்லாவற்றையும் கேட்டுமனதை அலட்டிக்கொள்ளாமல் ஒரு நாட்டின் தலை

"லலித்,காமினி மற்றும் அமைச்சர்களும் ஒன்று கூடி உள்ளார்கள்" இது 1992 அன்றைய சனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு எதிராக செயற்பட்ட பொழுது பிரேமதாசாவுக்கு ரணிலால் அறிவிக்கப்பட்டது.

"1993ஆம் ஆண்டு மேதின ஊர்வலத்தில் குண்டு வெடித்து ஆர்.பிரேமதாசா கொல்லப்பட்டார். " ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்பு ரணிலுக்கு இப்படி ஒரு செய்தி வந்தது "சந்திரிகாவின் பொதுக் கூட்டத்தில் குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார்கள், இந்தக்குண்டு வெடிப்பில் தங்களின் பெயர் பரவலாக அடிபடுகிறது. நாங்கள் இப்பொழுது என்ன செய்யப்போகின்றோம். " என்ற செய்தி வந்தது.

1999ஆம் ஆண்டு "சந்திரிகா அம்மையார் எமது கட்சியிலிருந்து அநேக பாராளுமன்ற உறுப்பினர்களை வலை வீசிபிடித்துக் கொண்டார்" அன்று ரணிலுக்கு தொலைபேசியில் வந்த செய்தி 2001ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்றபின் "எமது கட்சியில் தங்களுக்கு எதிராகக் கலகம் விளைவிப்பதற்கு அமைச்சர்கள் ஒன்று கூடி சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்"



அது அன்று ரணிலுக்கு வந்த தொலைபேசிச் செய்தி, அப்பொழுது அவர் வெளி நாட்டுப் பயணத்தில் ஈடுபட்டிருந்தார். அது அன்றைய தொலைபேசிச் செய்தி.

"சந்திரிகா பாராளுமன்றை ஒத்திவைத் துள்ளார். மூன்று அமைச்சுக்களையும் தம் வசம் எடுத்துள்ளார்.1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி இவைகளைச் செய்துள்ளார். ஆனாலும் நமக்கு பெரும்பான்மைப் பலம் இருக்கின்றபடியால் அரசாங்கத்தை அவரால் ஒன்றும் செய்ய முடியாது."

அது அமெரிக்காவில் இருக்கும் பொழுது அனுப்பிய தொலைபேசியின் இன்றைய செய்தி,

ரணில் அரசைக் கைப்பற்றியவுடன் சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்துகிறார்.ஜே.வி.பி.யினரின் பாதயாத்திரைகள், வேலை நிறுத்தங்கள் முஸ்லிம் காங்கிரஸ் இரண்டு மூன்றாகப் பிளவு பட்டுள்ளது. வடக்குக் கிழக்குப் பிரச்சினைகள், அரசாங்கக் கட்சிக்குள் பிரச்சினைகள், இது ரணில் விக்கிரமசிங்க கடந்த நாட்களில் கூறியவைகளாகும். இது முற்றிலும் உண்மை. ரணிலின் அரசியல் வாழ்வே ஒரு பிரச்சினைக்குரியதாக உள்ளது. இப்பொழுது ரணிலுக்கு எழுந்துள்ள புதிய பிரச்சினைகளுக்கு எப்படி முகம் கொடுக்கப் போகிறார். கூடிய விரைவில் அமெரிக்காவில் இருந்து வாருங்கள். நாங்கள் சனாதிபதிக்கு எதிராக ஊர்வலம் நடத்தப் போகிறோம். லட்சக் கணக்கில் மக்களைத் திரட்டிக் கொண்டு சனாதிபதி மாளிகையைச் சுற்றி முற்றுகையிடப் போகிறோம். காலையில் இருந்துதொலைபேசி மூலம் அமெரிக்காவில் இருக்கும் ரணிலுக்கு அனுப்பிய செய்திகளாகும். அதற்கு அவர் அனுப்பிய பதில் "நான் வரும்வரை ஒன்றும் செய்யாதீர்கள் சந்திரிகாவிடம் இருக்கும் ஆயுதங்கள் எல்லாவற்றையும் பாவிப்பதற்கு இடம் கொடுங்கள். அவரிடம் உள்ள கடைசித் தோட்டாவரை பாவிக்கட்டும், நான் வரும் வரை எமக்குள்ள ஆயுதம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களைப் பெறுவதே ஆகும்; நாங்கள் இதிலிருந்து ஆரம்பிப்போம்." இது ரணில் அமெரிக்காவில் இருந்து தமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் அறிவித்த செய்தியாகும்.

ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டுவர முடியாத தூரத்திற்கு வந்து விட்டார். ஐக்கிய தேசிய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பிடித்து தேசிய அரசொன்றை தமது தலைமையின் கீழ் அமைத்து ஒரு பொம்மையாக ரணிலை வைத்துக் கொள்வது அவரின் திட்டமாக உள்ளது. இப்பொழுது அவருக்கு பார்க்கும் இடமெல்லாம் தேசிய அரசாங்கம் மட்டுமே தெரிகிறது.

இப்பொழுது அவருக்கு இருக்கும் ஒரே துரும்பு தேசியஅரசொன்றை அமைப்பதே ஆகும். தேசிய அமைப்பு என்ற ஆயுதத்தில் இருக்கும் தோட்டாக்கள் முடிந்தாலும் தேசிய ஆயுதத்தை ரணிலின் கழுத்தில்

லங்காதீப பத்திரிகையில்
உபுல் ஜோசப் பர்ணாந்து
மொழியாக்கம் சக்திவேல்

மாட்டி கழுத்தை இறுக்குவதற்கு முயற்சிகள் செய்கின்றார் சந்திரிகா அவர்கள். ஆனபடியால் ரணில் இப்போது என்ன செய்யப்போகின்றார். இவைகளெல்லாம் ரணிலுக்கு இப்பொழுது பிரச்சினைகளாகத் தெரியவில்லை. ஆனால் தப்பித்தவறி அவர் தேசிய அரசாங்கத்துக்குப் போகப் போனால் ரணில் நான்கு கால்களுடன் கீழே விழுந்து



பிரதமர் ரணிலுக்கான ஆதரவு.

அவர் மிகவும் அமைதியாகவும், இந்த சம்பவங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளாமலும் இருந்தார். தற்பொழுது நாட்டில் உள்ள பிரச்சினைகளை வெளிநாட்டவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சிரித்தமுகத் துடன் பதிலளித்தார். அப்பொழுது சனாதிபதி புஷ் அவருடன் இருந்தார். உங்கள் சனாதிபதி உங்கள் நாட்டில் உங்களுக்கு எதிராக செயற்பட்டாலும் அமெரிக்க சனாதிபதி ஆகிய நான் உங்களை அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்கிறேன் இது சனாதிபதி புஷ் கூறிய பதிலாகும்.

"நான் இலங்கைக்கு போனால் எல்லாம் சரியாகிவிடும்" என அவர் புஷ்சுக்கு பதில் கொடுத்தார். அப்படி அவர் கூறிக் கொண்டு இலங்கை வருவதற்கு ஆயத்தங்களைச் செய்து கொண்டு இருந்தார். ஆனால் சந்திரிகா அவர்கள் அரசியல் என்ற புதிய பாதையில் பயணம் செய்வதற்கு பொருட்களைதயார் படுத்திக் கொண்டுள்ளார். எங்கே போவது எந்த இடத்தில் இருப்பது, என்று தெரியாமல் இருட்டில் கைகளையும் கால்களையும் தடவிக் கொண்டு இருக்கிறார். இதை இவர் புரிந்து கொண்டால் போதும். தனது மனதை

விடுவார்.ரணில்நான்கு கால்களுடன் விழுவது அரசாங்கம் விழுவதற்குச் சமமாகும்.சனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களையும் தம்வசம் எடுத்தது ரணிலை வீழ்த்துவதற்கே ஆகும். கருவேப்பிலைக் காம்புகள் கீழே வீழ்ந்து கிடப்பது போல் இருந்த சந்திரிகா அமைச்சுக்களைப் பொறுப்பேற்றது தூங்கிக் கிடந்தவர்களுக்கு பிராணவாயுவைக் கொடுத்து எழுப்பி விட்ட கதையாக மாறியுள்ளது. சந்திரிகா கொடுத்த பிராணவாயுவால் ஐ.தே கட்சி ஆதரவாளர்கள் லட்சக்கணக்கில் ரணிலை வரவேற்பதற்கு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தார்கள். அதாவது அமைச்சுப் பொறுப்புக்களை சனாதிபதி ஏற்று அவர்களை யன்னல் வெளியே வீசியதால் அவர்கள் எல்லோரும் தற்பொழுது பொது மக்களின் மடியில் போய் விழுந்து விட்டார்கள். ரணிலின் மடியில் தற்பொழுது விழுந்து கிடக்கும் பொதுமக்களை சனாதிபதி தனது மடிக்கு எடுப்பதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளார்.

இந்த முயற்சி வெற்றியில் முடியுமா? தோல்வியில் முடியுமா? என்பதை பொறுத்திருந்து பார்த்தால் தான் தெரியும் அப்படி சந்திரிகா அவர்கள் வெற்றி பெற்றால் அமைக்கப் போகும் அரசாங்கத்தில் ரணில் அவர்களை சந்திரிகா ஒரு நாய்குட்டியாகவே வைத்திருப்பார்.

# உருளைக்கிழங்குச் செய்கை பற்றிய சில குறிப்புகள்

உருளைக்கிழங்குப் பயிரானது 1960 களில் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும் இதை அண்டிய வன்னிப்பிரதேசத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குறிப்பிட்ட ஓரிரு இடத்தில் மாத்திரம் செய்கை பண்ணப்படுகின்றது. எனினும் வன்னியின் பெரும்பாலான இடங்களின் புவியியல், காலநிலை நிலைமைகள் இப்பயிரின் செய்கைக்கு மிகப் பொருத்தமானவையாக உள்ளன. இதன் அடிப்படையில் இங்குள்ள விவசாயிகளை இப்பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துமுகமாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

## நடுகைக்காலம்:-


இலங்கையின் மலைநாட்டுப் பிரதேசங்களில் ஒரு வருடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இச்செய்கை மேற் கொள்ளப்படுகின்ற போதிலும் இப்பிரதேசத்தின் காலநிலை நிலைமைகளின் அடிப்படையில் ஒரு போகத்துக்கு மாத்திரமே செய்கைபண்ண முடியும். ஏனெனில் இப்பயிரின் விளைவிற்கு பகற்கால,இராக்கால வெப்பநிலைகளிற்கிடையில் அதிக வித்தியாசம் அவசியமான தொன்றாகும். (குளிர்ந்த இராக்காலம் அவசியமானது) எனவே இப்பிரதேசத்தில் நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையான காலமே இப்பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான காலமாகும். நவம்பர் மாத ஆரம்பம் முதல் டிசம்பர் மாதம் 3 ஆம் கிழமை வரை நடுகையை மேற்கொள்ளலாம். எனினும் இக்காலப் பகுதியினுள் நடுகைக்காலத்துடன் இப்பயிரின் விளைவு பெரிதும் வேறுபடும் ஒன்றாகக் காணப்படுகின்றது. நவம்பர் மாத நடுப்பகுதியிலான நடுகையே அதிக விளைவைப் பெற்றுத்தரக்கூடிய ஒன்றாகும். டிசம்பர் மாதம் 3 ஆம் கிழமையை விடப் பிந்திய நடுகையை மேற்கொண்டால் மார்ச் மாதமளவிலேயே கிழங்கு வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இக்காலப் பகுதியில் அதிக வெப்பநிலை நிலவுவதால் வளர்ச்சியடைகின்ற, வளர்ச்சியடைந்த கிழங்குகளின் சுவாச வீதம் அதிகரிக்கின்றது. இதன் கார்ணமாகக் கிழங்கின் சேமிப்புணவில் குறைவேற்பட்டு விளைவைக் குறைக்கும் நிலை ஏற்படும்.

## இனங்கள்:-

இன்று பலவகைப்பட்ட இனங்கள் விதைகிழங்காகக் கிடைக்கின்ற போதிலும் டிசிறி, அனோவா, லைறா, ராஜா போன்ற இனங்களே எமது காலநிலை நிலைமைகளிற்கு ஒத்துப் போகக் கூடியனவையாகவும் அதிக விளைவைத் தர வல்லனவாகவும் காணப்படுகின்றன. பொதுவாக இவ்வினங்கள் எல்லாம் ஐரோப்பிய நாடுகளையே தமது பிறப்பிடமாகக் கொண்டவை. இவ் இனங்களை எமது பிரதேசத்தில் செய்கை பண்ணும் போது அவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வயது எல்லையை விடக் குறைவான காலத்திலேயே முதிர்ச்சியை அடைந்து விடுகின்றன. உதாரணமாக டிசிறி எனப்படும் போலந்து நாட்டிலிருந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைக் கிழங்காக இறக்குமதி செய்யப்படுகின்ற 105 நாள் வயதுடைய உயர் விளைவைத் தரக்கூடிய ஓர் இனமாகும். இவ்வினமானது போலந்து இலங்கையில் நுவரெலியா, வெலிமடை போன்ற இடங்களில் (சராசரி வெப்பநிலை 18°C) நடுகையில் இருந்து 105 நாட்களில் பூரண உடற்றொழிலியல் ரீதியான முதிர்ச்சியை அடைகின்ற போதிலும் எமது பிரதேசங்களில் காணப்படும் உயர் வெப்பநிலை காரணமாக (சராசரி வெப்பநிலை 25°C) 75 நாட்களிலேயே பூரண முதிர்ச்சியை அடையக் கூடிய தொன்றாகக் காணப்படுகிறது. இது ஆய்வுகளினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயல்பானது சிறந்த நடுகைக்காலத்துக்குப் பிந்திய நடுகையை மேற்கொண்டாலும் குறித்த பருவகாலத்தினுள் அறுவடையை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றது

## விதைகிழங்கு:-

உருளைக் கிழங்குச் செய்கைக்கான விதைத் தேவையை எடுத்து நோக்கின் ஒரு ஹெக்டேயருக்கு (2.5ஏக்கர்)கிட்டத்தட்ட 2000Kgவரையிலான விதைகிழங்குகள் தேவைப்படுகின்றன. எனினும் இந்த அளவானது கிழங்கின் பருமனுடன் மாறக் கூடியது. இப்பயிரின் உற்பத்திச் செலவில் கிட்டத்தட்ட 50



சதவீதமான செலவானது விதைகிழங்குக் கொள்வனவுக்கே செலவாகின்றது. பெரிய பருமனுடைய கிழங்குகளை விதைகிழங்காகப் பயன்படுத்தும் போது அதனால் தோற்றுவிக்கப்படும் செலவானது மேற்குறித்த வீதத்தை விட அதிகமாக இருக்கும். இந்நிலைமைகளில் பெரிய விதைக் கிழங்குகளில் இருந்து பெறப்பட்ட வெட்டுத் துண்டுகளையும் விதைத் தேவைகளுக்காகப்பயன்படுத்த முடியும்.இதன்மூலம் மொத்த உற்பத்திச் செலவை அதன் கால் பங்கினால் குறைக்க முடியும்.

இச்செயற்பாட்டைச் செய்வதற்கு முன்னர் இது பற்றிய சில விடயங்களைக் கருத்திற் கொள்ளுதல் அவசியமாகும். ஓர் உருளைக்கிழங்கை பொறுத்தமட்டில் அது இரு முனைகளைக் கொண்டிருக்கும். ஒரு முனை தாவரத்தையும் கிழங்கையும் இணைப்பதாக இருக்கும். மற்றைய முனை முன்னையதற்கு எதிரான முனையாக இருக்கும். மேற்குறிப்பிட்ட எதிர் முனையிலேயே கக்க அரும்புகளான கண் அரும்புகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படும்.எனவே கிழங்கை துண்டமாக வெட்டும் போது அதை நீள் பக்கவாட்டில் வெட்டுவதன் மூலம் இரு துண்டங்களிலும் குறிப்பிடத்தக்களவு சம எண்ணிக்கையான அரும்புகள் தோற்றுவிக்கப்படும் என்பதை உறுதி செய்து கொள்ளலாம். இதை விடுத்துக் கிழங்கின் குறுக்குப்பாடாக வெட்டி வெட்டுத்துண்டங்களைப் பெறும் போது ஒரு துண்டத்தில் மிகக் கூடுதலான அரும்புகளும் மறு துண்டத்தில் மிகச் சொற்ப அரும்புகளும் காணப்படும் நிலை ஏற்படும். மிகக் குறைந்த அரும்புகளைக் கொண்ட துண்டங்களின் முளைத்தல் வீதம் மிகக் குறைவாக இருக்கும்.அல்லது மிகச் சொற்ப எண்ணிக்கையான பிரதான தண்டுகளை தோற்றுவிக்கும். இந்நிலைமையில் அதிக விளைவை எதிர்பார்க்க முடியாது.

துண்டங்களை வெட்டும் போது நன்கு கூரிய தொற்று நீக்கப்பட்ட கத்தியினால் இயலுமான அளவிற்கு வெட்டு முகங்களின் அளவு குறைவாக இருக்கக் கூடியவாறு வெட்டுதல் அவசியமாகும்.ஏனெனில் பெரிய அளவிலான வெட்டுமுகங்களைக் கொண்ட துண்டங்கள் இலகுவில் நுண்ணங்கித் தொற்றுக்கு உட்படக்கூடியவையாகும். வெட்டப்பட்ட துண்டங்களின் வெட்டு முகங்களை "கப்ரான்" அல்லது "அந்திரக் கோல்" போன்ற பங்கசு கொல்லிக் கலவையில் தோய்த்து, வெட்டு முகம் கீழ் நோக்கி இருக்கத் தக்கவாறு நடுகையை மேற் கொள்ளலாம்.துண்டங்கள் நடப்படும் இடங்களில் நீர் தேங்குவது அவற்றில் அழுகல் ஏற்படுவதைத் துரிதப்படுத்தும் எனவே துண்டங்களை புருவங்களில் நடுதல் விரும்பத்தக்கது.

## முளைகட்டல்

நடுகைக் கிழங்குகளை நடுகைக்கு முன்னர் முளை கட்டலுக்குட்படுத்துவது அத்தியாவசியமான ஒரு செயல் முறையாகும். இதன்மூலம் முளைத்தலைத் துரிதப்படுத்தவும் சீரான முளைத்தலை அடையக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் நீர் தேங்கும் இடங்களில் நடுகைக் குழிகள் வெற்றிடம் ஆவதையும் குறைக்கின்றது. பொதுவாக உருளைக்கிழங்குப் பயிரின் வளர்ச்சியை முளைத்தலும் பதிய வளர்ச்சியும், கிழங்கு உருவாக்கம், கிழங்கின் வளர் ச்சியும் முதிர்ச்சியும் எனப் பிரிக்கலாம்.பெருமளவில் இப்பயிரின் விளைவைத் தீர்மானிக்கும் காலம் கிழங்கின் உருவாக் கத்திற்கும் கிழங்கின் முதிர் ச்சிக்கும் இடைப்பட்ட கால மாகும்.(கிழங்கின் வளர்ச் சிக்காலம்) முளைகட்டல் மூலம் முளைத்தலைத் தூண்டுவதால் முளைத்தலுக்கும் கிழங்கின் உருவாக்கத் துக்கும் இடைப்பட்ட காலமானது குறைவடையும் அதே நேரம் கிழங்கின் வளர்ச்சிக் காலமானது அதிகரிக்கின்றது.

விதை கிழங்குகளை இருளான கிட்டத்தட்ட 22-25°C வெப்பநிலை 85 வீத ஈரப்பதன் உள்ள ஓர் இடத்தில் 5-6 தினங்களுக்கு பராமரிப்பதன் மூலம் அவற்றின் முளை கொள்ளலைத் தூண்டலாம். இதற்காக தயோ யூரியா ஜிபரலிக் அமிலம் போன்ற இரசாயனங்களையும் பயன்படுத்த முடியும். இப்பயிரின் விளைவைத் தீர்மானிப்பதில் ஒரு நடுகைக் கிழங்கில் இருந்து உருவாக்கப்படும் பிரதான தண்டுகளின் எண்ணிக்கையும் ஒரு செல்வாக்குச் செலுத்தும் காரணியாகும். ஆய்வுகளின் படி நான்கு தொடக்கம் ஐந்து வளமான தண்டுகளை உருவாக்குகின்ற ஒரு விதைகிழங்கில்

எஸ். சத்தியசீலன்,
B.Sc (Hons) in Agric
வெளிக்கள உதவியாளர் ,
யு.என்.எச்.சி.ஆர்.,
யாழ்ப்பாணம்.

இருந்தே குறிப்பிடத்தக்க பருமனுடைய கிழங்குடன் கூடிய விளைவைப் பெறமுடியும். பொதுவாக விதை கிழங்குகளைப் பொறுத்தமட்டில் அவற்றில் முதலில் தோற்றுவிக்கப்படும் முளை உச்சி ஆட்சி உடையதாகக் காணப்படுவதால் அதனை அடுத்து தோன்றுகின்ற முளைகளின் விருத்தியை நிரோதிப்பவையாகவும் காணப்படுகின்றன. எனவே முதலில் தோன்றும் முளைகளைக் கிள்ளி அகற்றுவதன் மூலம் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான முளைகளின் விருத்தியைத் தூண்டமுடியும்.

(தொடரும்)

# குடாநாட்டுப் பாடசாலைகளில் பண அறவீடு ஆயிரக்கணக்கான மாணவர் கல்வி பாதிப்பு

### -யாழ்.அரச அதிபர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலை அதிபர்களின் பொறுப்பற்ற பண வசூலிப்பு செயற்பாடுகளால் ஆயிரக் கணக்கான மாணவர்கள் தம் கல்வியைத் தொடர முடியாது பாதிப்பதாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டக் கல்வியின் நிலையும் அது தொடர்பான வளர்ச்சி குறித்துக் கருத்து தெரிவித்த அவர் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் அண்மைக் காலமாக கல்வி நடவடிக்கைகளுக்காக அதிபர்கள் அதிகளவு பண அறவீடுகளை விதித்து வருவதால் அரசால் வழங்கப்படும் இலவசக் கல்வியை இலவசமாக அடையமுடியாத மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளதாக கவலை தெரிவித்தார்.

கல்வி ரீதியான அரச புறக்கணிப்புக்களாலும், கல்விக் கூடங்களை ஆக்கிரமித்துள்ள படையினரின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட எம் மாணவர்களின் தரத்தை மேம்படுத்த முடியாத நிலையுள்ளது எனவும் கூறியுள்ளார். (33)

# 4சிறுவர் இல்லங்களுக்கு புனர்வாழ்வுக் கழகம் உதவி

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள நான்கு சிறுவர் இல்லங்களுக்கு ஒரு லட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபா பண உதவியினை வழங்கியுள்ளது.

இந்நிதியை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு பணிப்பாளர் குரு-தேவராஜன் சிறுவர் இல்லங்களின் பொறுப்பதிகாரிகளிடம் அண்மையில் ஒப்படைத்துள்ளார். இந்த வகையில் வாழைச்சேனை விவேகானந்தா சிறுவர் இல்லம் ரூபா 30ஆயிரம் சந்திவெளி மாணிக்க வாசகர் இல்லம் ரூபா25ஆயிரம்,கொக்கட்டிச் சோலை கதிரொளி சிறுவர் இல்லம் ரூபா50ஆயிரம், பழுகாமம் விவேகானந்தா சிறுவர் இல்லம் ரூபா40 ஆயிரம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

# உந்துருளி பதிவிற்கான சான்றிதழ்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மோட்டார் வாகன உதவி ஆணையாளர் செயலகத்தில் பதிவுக்குட்படுத்தாதிருந்த உந்துருளிகளை கடந்த 5ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை பதிவுக்கு உட்படுத்தியவர்களுக்கு பதிவிற்கான சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

மேற்குறிக்கப்பெற்ற திகதிகளில் உந்துருளிகளைப் பதிவிற்குட்படுத்திப் பணம் செலுத்தியவர்களுக்குஎதிர்வரும் 24ஆம் 25ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட செயலக மோ.போ.உ.ஆணையர் அலுவலகத்தில் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுமென கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அன்றைய தினங்களில் உந்துருளிகளுக்கான காப்புறுதி செலுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

# தமிழீழ மாவீரர் நாளை எழுச்சியுடன் கொண்டாட முன்னேற்பாடுகள்

தமிழீழ மாவீரர் நாளையொட்டி துணுக்காய் பாண்டியன் குளம் பிரதேசங்களில் பதாதைகள் கட்டப்பட்டு வருகின்றன.

பிரதான வீதிகளிலும் கிராமங்களிலும் உள்ள முக்கிய சந்திகளிலும் இந்தப் பதாதைகள் கட்டப்பட்டு வருகின்றன.

வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பாண்டியன் குளம் பிரதேச மக்களாலும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் சிரமதானம் செய்துவருகின்றனர்.

தமிழீழ மாவீரர் நாளை எழுச்சிகரமாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மாவீரரின் பெற்றோர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். குறிப்பிட்ட நாட்களில் அந்தந்தப் பகுதிகளில் மாவீரர்களின் திருவுருவப்படங்களும் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்படவுள்ளன.

இதேவேளை உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் மாவீரர் தின முன்னோடி கலந்துரையாடல் கடந்த புதன் அன்று 4.30 மணிக்கு உடையார்கட்டு தெற்கு தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் வினாயக மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இவ்வொன்றுகூடலில் உ. வடக்கு, உ.தெற்கு, சுதந்திரபுரம் பகுதி மக்கள் கலந்து கொண்டனர்.

இங்கு, கருத்துரைகளை உ. வடக்கு கிராம அலுவலர், புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த நவநீதன்,சுதந்திரபுரம் கிராம அலுவலர் ஆகியோர் வழங்கினர்.கருத்துரையானது 2003ஆம் வருட மாவீரர் எழுச்சி தினம் சிறப்பாக அமையப் பெறுவதற்கான முன்னோடியாக அமைந்திருந்தது.

(24.19)

# ஒவ்வொரு குழந்தையையும் கற்றலில் இணைத்தல் திட்டத்தினூடாக 18600மாணவர் பயனடைவு!

## றீடோ நிறுவனத்திற்கு யுனிசெவ் பாராட்டு

கடந்த இருவருடங்களில் யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒழுங்கமைப்பின் கிராமிய பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் (றீடோ)நடைமுறைப் படுத்திய ஒவ்வொரு குழந்தையும்



பாடசாலைக் கல்வி கற்றலில் இணைத்தல் திட்டத்தை சிறப்பாக செய்துமுடித்தமைக்குப் பாராட்டி றீடோ நிறுவனத்திற்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு கடந்த வியாழனன்று பி.ப 3.00மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் யுனிசெவ் நிறுவன கல்விக்கான வெளிக்கள அலுவலர் திருமதிகௌரிபாலன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு வருகை தந்த பிரதிநிதிகளின் மங்கல விளக்கேற்றல் அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் யுனிசெவ் நிறுவன வன்னிக்கான பிரதிநிதி பெனிபுறூன், துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் தேவேந்திரன் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், அன்னை இல்லஉளவளத்துணை இயக்குனர் அருட்திரு றெஜினோல்ட், றீடோ நிறுவனப் பணிப்பாளர் எஸ். இனியவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இவ்வகையில் இச்செயற்றிட்டத்தைப் பாராட்டி றீடோ நிறுவனத்திற்கான நினைவுக் கேடயத்தை இலங்கைக்கான யுனிசெவ் திட்டப் பணிப்பாளர் ஜாமின் மசூர் றீடோ நிறுவனப்பணிப்பாளருக்கு வழங்கிக் கௌரவித்தார்.

தொடர்ந்து றீடோ நிறுவன வலய இணைப்பாளர்களுக்கான பரிசில்கள், வலயக்கல்விப் பணிப்பாளருக்கான பரிசில்கள், அதிக மாணவர்களை பாடசாலைக்கு சேர்த்துக்கொண்ட பாடசாலைகளுக்கான பரிசில்கள் என்பன யுனிசெவ் நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பாடசாலைக்குச் செல்ல முடியாமல் இருந்த 21727 மாணவர்களில் 18600 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் மீளச் செல்வதற்கு 2000 தொண்டர்களை ஈடுபடுத்தி வீட்டுத் தரிசிப்பு, விழிப்புணர்வுச் செயற்பாடுகளை றீடோ நிறுவனம் நடைமுறைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் துயிலும் இல்லத்தில் தொடர் சிரமதானப் பணி

(முள்ளியவளை)

மாவீரர் நாளினை முன்னிட்டு முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

மேற்படி துயிலும் இல்லத்தில் கடந்த 10ஆம் திகதி முதல் முள்ளியவளை பிரதேச ஊரக வளர்ச்சிப் பணி பொறுப்பாளர் குமரனின் ஒழுங்கு படுத்தலில் முள்ளியவளை பிரதேச ஊரக வளர்ச்சிப் பணி குழுக் களினால் சிரமதானப் பணி ஆரம்பிக் கப்பட்டு தொடர்ச்சியாக சுழற்சி முறையில் இடம்பெற்று வருகின்றன.மேற்படி மாவீரர் துயிலுமில்லத்தில் இவ்வாண்டு மிகச் சிறப்பான முறையில் மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெற முள்ளியவளை பிரதேச அரசியல் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

### -வடக்கு-கிழக்கு மாகாணத்தில் -

# கணிதபாட அடிப்படை அறிவு 30 வீத மாணவர்களுக்கே உண்டு

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணத்தில் தரம் 7ல் கல்வி கற்கும் மாணவர் மத்தியில் கணித பாடத்தில் நடாத்திய பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 15 தொடக்கம் 30சத வீதமானமாணவர்களே கணித பாடத்தில் அடிப்படை அறிவைப் பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடகிழக்கில் 1151 பாடசாலைகளில் சுமார் 56ஆயிரம் மாணவர்கள் தரம் 7வகுப்புகளில் கல்வி கற்கிறார்கள். இம் மாணவர்களில் தாய்மொழி அறிவு,கணித அறிவு பற்றிய மதிப்பீடு ஒன்றை நடத்திய போதே இத்தகவல் தெரியவந்துள்ளது.புதிய கல்விச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போதுபயிற்சிபெற்ற கணித ஆசிரியர்கள் போதிய அளவில் நியமிக் கப்படாமையும் அத்துடன் உரிய பௌதீக வளங்கள் வழங்கப்படாமையுமே கணித பாடத்தில் தரம்7மாணவர்கள்அடிப்படை அறிவைப்பெறமுடியாமைக்குக்காரணம் என மாகாண கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கல்லூரி விடுதியிலிருந்த மாணவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

15 வயதுச் சிறுவன் ஒருவனை 15நாட்களுக்கும் மேலாகக் காணவில்லை என அவனது தாயார் மனிதஉரிமைகள்ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் காரைநகர் ஊரியைச் சேர்ந்த இந்திரகுமார்.துஷியந்தன்(வயது15) என்பவரே காணாமல் போயுள்ளார்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது, வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விடுதியில் தங்கி நின்று பயின்று வரும் பிரஸ்தாப சிறுவன் தீபாவளிப் பண்டிகைக்காக விடுமுறையில் காரைநகரில் உள்ள தனது வீட்டிற்கு வந்துவிட்டு கடந்த மாதம் 27ஆம் திகதி மீண்டும் விடுதிக்குச் சென்ற வரை இற்றைவரை காணாததால் பதற்றமடைந்த பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (33)

### -அளம்பில் பிரதேசத்திலுள்ள-

# திலீபன் மருத்துவமனையில் ஒக்ரோபரில் 1220 பேர் சிகிச்சை

முல்லைத்தீவு அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் ஒக்ரோபர் மாதத்தில் 1220 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கூடுதலாக வைரஸ் காய்ச்சல், சுவாசத் தொற்றிலுமே அதிகமாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

சென்ற வருடத்தை விட இவ்வருடம் மலேரியாவின் தாக்கம் குறைவாகக் காணப்படுகின்றது என்றும். கட்டட வசதி பெரிதாக இருந்தால் வரும் நோயாளிகளின் சிரமத்தை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவசர நோயாளர்களை முல்லைத்தீவு கட்டம் 1 வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாகவும். வைத்தியர் திருமதி க.செவ்வானம் தெரிவித்தார். (20)

# பனம் விதை நடுகைத் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

மலையாளபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள புதியஐயனார்புரம் கிராமத்தில் பனம் விதை நடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட த.பொ.மே நிறுவன இணைப்பாளர் செ.கருணாகரன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் பனை தென்னை அபிவிருத்திப் பகுதி த.பொ.மே நிறுவனப் பொறுப்பாளர் அருள், மலையாளபுரம் கி.சே அலுவலர் வீ.குணசிங்கம் ஆகியோர் பனம் விதைகளை நாட்டிவைத்து திட்டத்தினை ஆரம்பித்தனர்.

தொடர்ந்து ஊரகவளர்ச்சி, கமக்கார அமைப்பு, மாதர்சங்கம் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர்,பொதுமக்கள் ஆகியோர் இணைந்து பனம் விதை நடுகையினை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை தடுக்க காவல் துறை தீவிர நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகள், தமிழீழ காவல் துறை வீதிப் போக்குவரத்துப்பிரிவினரால் கைது செய்யப் பெற்று விசாரணைக்குட்படுத்தி வருவதுடன் தண்டப்பணமும் அறவிட்டு வருகின்றனர்.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளினால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றமையும் இதன் காரணமாக வீதியில் பயணிப் பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளமையின் காரணமாக மேற்படி நடவடிக்கையினை தமிழீழ காவல் துறைவீதிப் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 13ஆம் 14ஆம் திகதிகளில் மதுபோதையில் உந்துருளிகளை செலுத்திச் சென்ற ஐவரை காவல் துறையினர் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியதுடன் தண்டப்பணமும் அறவிடப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பரந்தன் [வ-து]

பதிவு எண்:- பிஏ/47 பதிவு திகதி :- 10.02.1971

கழற்றப்பட்ட லேடன் உடற்கோப்பும், உடற்கோப்பு பாகங்களும்

## பகிரங்க ஏல விற்பனை - 2003.11.29

பாவனையிலிருந்த பாரவூர்தியின் உடற்கோப்பினை எரிபொருள் கொள்கலன் குறித்த பாரவூர்தியில் ஏற்றுவதற்காக (இணைப்பதற்காக) கழற்றப்பட்ட உடற்கோப்பினை 2003.11.29ஆந்திகதி முற்பகல் 11.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்யவிரும்பியவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிப்பு வைப்பு ரூபா ஐந்நூறு (500/=)செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றிருத்தல்வேண்டும்

2003.11.20ஆந் திகதியில் இருந்து பரந்தன் சந்தியில் உள்ள எமது தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
க.வ.ப.நோ.கூ.சங்கம்,
பரந்தன்.

(சி-8906)



தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள:-
1.கல்வித்தகைமை:- க.பொ.த.(சாதாரணம்) கற்றிருத்தல்.
2.அகவை:- 23தொடக்கம் 35 வரை.
3.உயரம் :- 05அடி 05 அங்குலம்.

குறிப்பு:-
01.விண்ணப்ப முடிவு நாள் :- 30.11.2003
02.அடிப்படை மாத சம்பளம்:- 3600 - 4700 +2000
=5600.00
10x110
03.விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத்தேர்வு :-
06.12.2003,07.12.2003ஆகிய நாட்கள் பாண்டியன் வாணிபம் கரடிப்போக்கு கிளிநொச்சி பணிமனையில் நடைபெறும்.
04.நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05.விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, மல்லாவி,கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுமைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8903)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-11-2003

# எதற்காக தேசிய அரசு

சனாதிபதி சந்திரிகா தொடர்ச்சியாக தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பது குறித்து வலியுறுத்தி வருகின்றார். நேற்று முன்தினம் கண்டியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போதும் சனாதிபதி சந்திரிகா, தேசிய நல்லிணக்க அரசிற்கான ஒத்துழைப்பைக் கோரியிருந்தார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேசிய நல்லிணக்க அரசு ஒன்றில் இத்தகைய தீவிரம் காட்டுவதற்கு நோக்கம் தான் என்ன? அவர் கூறிக்கொள்வது போன்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இரண்டு பிரதான கட்சிகள் இடையேயும் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவா? அதாவது இனப்பிரச்சினை விடயத்தில் இரு பிரதான கட்சிகளிடையேயும் ஏற்பட்டுள்ள பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கானதா?

'தேசிய அரசு' 'தேசிய நல்லிணக்க அரசு' என்பவை போன்ற பதங்கள் கடந்த தொண்ணூறுகளின் பிற்பகுதியில் இருந்து பேசப்பட்டுவரும் ஒன்றாகவே உள்ளது. பொதுவில் ஆட்சியில் இருப்பவர்கள் அதாவது அதிகாரத்தில் உள்ளவர்களின் நிலைமை பலவீனம் அடையும் போது இத்தகைய தேசிய நல்லிணக்க அரசு பற்றிப் பேசுகின்றனர். ஆனால் அரசியல் ரீதியில் பலம் பெற்ற பின்னர் இத்தகைய பேச்சை அவர்கள் எடுப்பதில்லை.

சனாதிபதி சந்திரிகாவும், ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடமிருந்து மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுப்பதற்கு முன்பாக தேசிய அரசு பற்றியோ, நல்லிணக்க அரசு பற்றியோ பேசவில்லை. அமைச்சுக்களைப் பறித்த பின்னர் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியின் காரணமாக –வேறு விதமாகக்கூறின் நெருக்கடியைத் தணியச் செய்யும் நோக்கிலேயே தற்பொழுது தேசிய அரசாங்கம் பற்றிப் பேசமுற்பட்டுள்ளார்.

இது ஒருபுறம் இருக்க தேசிய அரசு அமைப்பதற்கான அழைப்பு விடுத்துள்ள சனாதிபதியின் நோக்கம் தான் என்ன? அதாவது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது போன்று இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வு ஒன்றைக் காணும் நோக்குடன் கூடியதா? அன்றிப் பந்தைப் பிறர் பக்கம் அடிக்கும் நோக்கம் கொண்டதா? அதற்கும் அப்பால் பௌத்த–சிங்கள சக்திகளின் குரலாக ஒலிக்கும் வகையில் இரு பிரதான சக்திகளும் கூட்டுச் சேர்ந்து சிறுபான்மையினரின் கோரிக்கைகளை நசுக்கிவிடுவதற்காகவா? என்பது குறித்து விளங்கிக் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளுக்குத் தனது பூரண ஆதரவை வழங்குவதாக இருந்திருப்பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த சமாதான முன்முயற்சிகளுக்குத் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருத்தல் முடியும். இது ஒரு கடினமான காரியமாக இருந்திருக்க மாட்டாது. ஆனால், சனாதிபதி சந்திரிகா அவ்வாறு நடந்து கொண்டதாக இல்லை. சமாதான முயற்சியில் ஈடுபட்டிருந்த அரசாங்கத்திற்கு எதிராக மாத்திரமல்ல, சமாதான ஏற்பாட்டாளராக பணியாற்றிய நோர்வே மற்றும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கும் எதிராகவுமே அவரது நடவடிக்கைகள் இருந்தன.

அதாவது சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதான நடவடிக்கைகளையே அவர் மேற்கொண்டிருந்தார். இந்நிலையில் தற்போதைய அரசியற் சூழ்நிலையில் தேசிய அரசு பற்றியும், சமாதான முயற்சிகளுக்குத் தாம் விரோதிகள் அல்லர் எனப் பேசுவதும் சந்தர்ப்பவாத அரசியல் பேச்சே ஒழிய இனப் பிரச்சினைத் தீர்விற்கான முயற்சி அல்ல.

சனாதிபதி சந்திரிகா மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்தமையானது, அவரது எதிர்பார்ப்பிற்கும் அதிகமாகவே அவரைக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கியது. அதிலும் குறிப்பாக நோர்வே அரசு மத்தியஸ்துவ முயற்சியில் இருந்து விலகியமை சனாதிபதி மீதான குற்றச்சாட்டை வலுவானதாக்கும் ஒன்றாகவே மாறியிருந்தது.

இந்நிலையில், பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையும் இல்லை. ஏனெனில் சனாதிபதியின் சமாதான முயற்சிக்கு எதிரான நடவடிக்கை மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றதாக இருக்கவில்லை. இதனால், தேர்தல் ஒன்றை நடத்த விழைவதானது, தற்பொழுது உள்ள நிலைமையைவிட தமது நிலையை மோசமானதாக்கிவிடும் என்பது அவருக்கு நன்கே தெரிந்திருந்தது. அத்தோடு, அத்தகையதொரு சனாதிபதியின் முடிவு சர்வதேச சமூகத்தின் கண்டனத்திற்கும் உள்ளாகக் கூடியதொன்றாகவே இருந்தது.

இத்தகையதொரு நிலையில் தான், சனாதிபதி சந்திரிகா தேசிய நல்லிணக்க அரசு பற்றித் தொடர்ந்து பேசவேண்டியவராகவுள்ளார். இதன் மூலம் சமாதானத்திற்குத் தான் எதிரியல்ல எனக் காட்ட விழைகின்றார். மறுவழமாக சனாதிபதி சந்திரிகாவின் இத் தேசிய அரசாங்கக் கோரிக்கையானது பௌத்த–சிங்கள அடிப்படைவாதிகளையே திருப்திப்படுத்தக்கூடியதாகும்.

ஏனெனில், இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளின் பிரிவினையே இலங்கையில் சிறுபான்மை இனங்கள் அரசாங்கங்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும், செல்வாக்குச் செலுத்துவதற்கும் காரணம் என்பது பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளின் நிலைப்பாடாகும். இந்நிலையில், சந்திரிகா குமாரதுங்கவின் கோரிக்கை நிறைவேறுமானால், இலங்கையில் சிறுபான்மை இனங்களை வலுவிழக்கச் செய்யும் பேரினவாத சக்திகளின் அபிலாசை சனாதிபதி சந்திரிகாவால் நிறைவு செய்யப்பட்டதாகிவிடும். இந்தவகையில் பார்க்கையில், சனாதிபதி சந்திரிகாவின் தேசிய அரசாங்கம் என்பது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்கான மார்க்கம் என்பதைவிட, சிறுபான்மை இனங்களை அழித்தொழிப்பதற்கான ஒன்றுசேர்தல் எனக் கொள்ளுதல் கூடப் பொருத்தப்பாடானதாக இருக்கும்.

# அரசியல் குழப்ப நிலையால் பலகோடி ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஆபத்து

## -ரூ.1500 கோடி ஏற்கனவே இழப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலையால் சுமார் 1500 கோடி ரூபா பெறுமதியான ஐந்து வெளிநாட்டு முதலீடுகள் இழக்கப்பட்ட நிலையில் மேலும் பல நூறு கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் இழக்கப்படும் வாய்ப்புள்ளதாக வெளிநாட்டு முதலீட்டுச் சபையின் தலைவரும் இயக்குனர் நாயகருமான அர்ஜுன மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உட்கட்டமைப்பில் முதலீடு செய்யவிருந்த ஐந்து வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் முதலீட்டை திடீரென நிறுத்தி விட்டன. இதனாலேயே இத் தொகை இழக்கப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி அடுத்த மூன்று மாதத்திற்குள் தீராது விட்டால் மேலும் 2,500 கோடி ரூபா இழப்பேற்படும் எனக் கூறியுள்ளார்.

முன்னர் இலங்கையில் இருந்து தங்கள் முதலீடுகளைத் திரும்பப் பெற்ற பல வெளிநாட்டு நிறுவனங்கள் சமாதான முயற்சிகளையடுத்து மீண்டும் இலங்கையில் முதலீடுகளைச் செய்தன. ஆனால் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை அதனை மாற்றியுள்ளது.

கொழும்பிற்கும் கண்டிக்கும் இடையே அதிவேக நெடுஞ்சாலையொன்றை அமைக்கும் தனது 2800 கோடி ரூபாவுக்கான திட்டத்தை மலேசிய அரசு உடனடியாக இடைநிறுத்தியுள்ளதெனவும் கூறியுள்ளார்.

# தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு கூட்டாகத் தீர்வுகாணத் திட்டமாம்

## சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு சிறுகட்சிகளின் உதவியுடன் இரண்டு பெரிய அரசியல் கட்சிகளினாலும் கூட்டாகத் தீர்வு காண்பதற்கான திட்டமொன்றை தான் தயாரித்துள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஒரு குறுகிய காலத்திற்காயினும் இத்திட்டத்தினை அமுல்செய்ய வேண்டுமென அவர் மேலும் கூறியுள்ளார். அம்பாந்தோட்டை மாவட்ட நீர் விநியோகத் திட்டமொன்றை ஆரம்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு சனாதிபதியின் பொறுப்பிலேயே இருக்கிறது. எனினும் பாதுகாப்பு அமைச்சை தனது அரசிடம் கையளிக்குமாறு பிரதமர் பதவிப் பிரமாணம் செய்வதற்கு முன்னர் தொடர்ச்சியாகக் கோரி வந்துள்ளார் என அவர் மேலும் கூறியுள்ளார். இதனிடையே சமாதானத்திற்கு தான் அர்ப்பணிப்பு செய்துள்ளதால் பாதுகாப்பு அமைச்சை அரசாங்கத்திடம் கையளிக்க தான் முன்வந்ததாகக் கூறியுள்ளார். அத்துடன் புலிகளுக்கு வழங்கப்பட முடியாத விடயங்கள் தனது நிர்வாகத்தின்போது அவர்களுக்கு உறுதியளிக்கப்படவில்லையென தெரிவித்த சனாதிபதி அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை மட்டுமே புலிகளுக்கு வழங்க முடியுமெனக் கூறியுள்ளார். எவ்வாறாயினும் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் நாட்டின் இறைமையை கேள்விக்குறிக்குள் கொண்டு வருவதாக அமைந்துள்ளன எனவும் கூறியுள்ளார்.

# பாரிய குற்றங்கள் புரிந்த 254பேர் கைது பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

இந்த வருடம் பாதாள உலகம் மற்றும் கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்த 254 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும். இவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பதில் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தலைமையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனவரி மாதத்திலிருந்து கடந்த, வெள்ளிக்கிழமை வரை பொலிசார் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் மூலமே இவர்களைக் கைது செய்ததாகவும் அத்துடன் இந்தக் கைதுகளின் போது மொத்தம் 185 துப்பாக்கிகளும், 166கைக் குண்டுகளும், 12ஆயிரத்து 714தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். இதில் இரட்டை மற்றும் ஒற்றைக்குழல் துப்பாக்கிகள் 21,ரிப்பிட்டர் துப்பாக்கிகள் 6,ரி 56 ரக துப்பாக்கிகள் 39,8.4 ரக துப்பாக்கி 1,எஸ்.எல்.ஆர்-1, உள்ளூர் உற்பத்தித் துப்பாக்கிகள் 31, பிஸ்டல்கள் 40, ரிவோல்வர்கள் 34, ஏனைய ரகங்களைச் சேர்ந்த கைத்துப்பாக்கிகள் 12, கைக்குண்டுகள் 166, தோட்டாக்கள் 12 ஆயிரத்து714 லும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றைத் தங்கள் வசம் வைத்திருந்த இந்த மோசமான குற்றவாளிகள் நாட்டில் இடம் பெற்றுள்ள கொலை, கொள்ளை, வாகனங்கள் கடத்தல்கள் உட்பட 9 விதமான முதலாம் ரக குறறச் செயல்களில் ஈடுபட்டவர்களாவர்.

# ரி.வி.எஸ்.கின்னஸ இறுதிப் போட்டியில் தற்கொலை அச்சுறுத்தல்




எமது சங்கத்திற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உடனடியாக அங்கீகாரம் வழங்காவிட்டால், கொல்கத்தா ஈடன் கார்டன் அரங்கில் ரி.வி.எஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியின் போது தற்கொலை செய்து கொள்வோம்.

இவ்வாறு பீகார் கிரிக்கெட் சங்கத்தின் (பி.சி.ஏ) ஆதரவாளர்கள் அச் சுறுத்தியுள்ளனர். இதுதொடர்பாக பீகார் மாநிலத் தலைநகர் பட்னாவில் கடந்த புதனன்று ஆர்ப்பாட்டம் மொன்று நடைபெற்றது.

தமது தற்கொலை அச்சுறுத்தல் குறித்து கடந்த வெள்ளியன்று இந்திய சனாதிபதி, பிரதமர், இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஆகியோருக்கு பீகார் கிரிக்கெட் சங்க ஆதரவாளர்கள் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். ரி.வி.எஸ். கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்காவுடனான போட்டித் தொடர் இங்கிலாந்துக்கு கடினமாக அமையும்

## பயிற்சியாளர் ஜோன் டைசன்

இங்கிலாந்து அணிபங்களாதேஷில் பெற்ற அனுபவங்களைப் போலன்றி சிறிலங்காவுடனான போட்டித்தொடர் அவர்களுக்கு மிகக் கடினமானதாக இருக்கும் என சிறிலங்கா பயிற்சியாளர் ஜோன் டைசன் தெரிவித்துள்ளார்.


மேற்படி இங்கிலாந்துடனான போட்டித் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கிலாந்து அணி மிகவும் திறமைமிக்கது. தொழில் ரீதியாக கிரிக்கெட் விளையாடும் சிறந்த வீரர்களைக் கொண்டது. கடந்த ஆறு மாத காலத்தில் அவர்களது வளர்ச்சி அபாரமானது ஆனாலும், அவர்கள் சிறிலங்காவில் நடைபெறவுள்ள போட்டித் தொடரில் கடுமையான எதிர்ப்பை சந்திக்க வேண்டிவரும் என்றும் தெரிவித்தார்.

இங்லாந்து, சிறிலங்கா அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய அரசாங்கம் அமைப்பது
# சிறுபான்மையினரை நசுக்கும் செயல்
## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான்

(கொழும்பு)
தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஐ.தே.கட்சியோ, பொ.ஐ.முன்னணியோ முன்வருமாக இருந்தால் அதனை எதிர்த்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் செயற்படும் என அதன் தலைவரும் அமைச்சருமான தொண்டமான் தெரிவித்துள்ளார்.
தேசிய அரசாங்கம் என்பது சிறுபான்மைக் கட்சிகளை நசுக்கும் செயற்றிட்டம் எனத் தெரிவித்துள்ள அவர், இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதைக் கூட தவிர்க்கமுடியாது எனத் தெரிவித்துள்ளார்.
நேற்று நாவலப்பிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (32)



ஈராக்கில் சுடப்பட்ட- பிளக்கவாக் உலங்கு வானூர்தியின் பாகங்களை அகற்றும் மீட்புப் படையினர்.

# சனாதிபதியின் சமாதான முன்னெடுப்புக்களை
# த.தே. கூட்டமைப்பு ஆதரிக்கமாட்டாது!

- யாழ்.மாவட்ட பா.உ.ரவிராஜ்

சமாதான முன்னெடுப்புக்களில் சனாதிபதி ஈடுபட்டால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவு வழங்காது இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.
நேற்றைய தினம் சாவகச்சேரியில் உள்ள அவரது அலுவலகத்தில் வைத்துசமகால அரசியல் தொடர்பான விளக்கங்களை கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
தொடர்ந்தும் தெரிவித்த அவர் தமிழர்களின் சமஷ்டி முறையான அரசியல் கோரிக்கைகளையும், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாகப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைவையும் எதிர்த்துக் குரல் எழுப்பிவரும் ஜே.வி.பி.யுடன் கைகோர்த்து நிற்கும் சனாதிபதியால் எமக்கான ஒரு அரசியல் உரிமையை தந்துவிட முடியாது.
அத்துடன் அவர் கடந்த காலத்தில் செய்த இனவாதச் செயல்களையும் தமிழர் மறக்கப்போவதில்லை. எனவே சமாதான முன்னெடுப்புக்கள் பிரதமருக்கே கூட்டமைப்பு தன் ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்ததுடன் பிரதமராலேயே இம்முன்னெடுப்புக்கள் நகர்த்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். (33)

# சனாதிபதியின் யோசனையை ரணில் நிராகரிக்கக் கூடாது
## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரிக்கக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கேட்டுள்ளார். சனாதிபதியின் இத்திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க நிராகரிப்பாராயின் அது மாபெரும் தவறாக அமைந்துவிடும் எனவும் அவர் கூறினார். அமைதியை உருவாக்க அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படத் தருணம் வந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

ஜே.வி.பி.-சு.க.
# கூட்டமைப்புக் குறித்து இன்று பேச்சுவார்த்தை

(கொழும்பு)
சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாக ஜே.வி.பி.யும், மக்கள் ஐக்கிய முன்னணியும் இன்று ஆராயவுள்ளன.
இன்று சனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள இது தொடர்பான மத்திய குழுக்கூட்டத்தில் ஓர்இணைக்கப்பாட்டுக்கு வந்துதேர்தல் ஒன்றுக்குச்செல்வதா? அல்லது கூட்டமைப்பின் கீழ் அரசாங்கம் ஒன்றிற்கான ஆயத்தங்களைச் செய்வதா என்று தீர்மானிக்கப்படவுள்ளது.
இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் கூட்டமைப்பு அமைக்கப்படவேண்டும் என்று ஒரு அமைப்பும், கூட்டமைப்பு அமைக்க கூடாதுஎன்று இன்னொரு அமைப்பும் செயற்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (32)

— தற்போதைய நிலை குறித்து —
# பிரஜைகள் குழுக்களுடன் ஐ.தே.க. தொடர் பேச்சு

(கொழும்பு)
ஐ.தே.கட்சி தற்போதைய அரசியல் நிலைமைகுறித்து அரசியல் மற்றும் பிரசைகள் குழுக்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.
பிரதித்தலைவர் கருஜெயசூரிய தலைமையிலான ஐ. தே.கட்சிக் குழு இன்று இலங்கை தொழில்துறைசார் நிபுணர்கள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறது.
ஐ.தே.கட்சியின் தவிசாளர் மலிக்சமரவிக்கிரம பொதுச் செயலாளர் கட்டுக்கொட்டுவ ஆகியோரும் இக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

- பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணை -
# அனுமதிக்க முடியாதென மல்வத்த பீடம் அறிவிப்பு

(கொழும்பு)
அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வந்துள்ள குற்றப் பிரேரணைகளை தான் அனுமதிக்க முடியாது என மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்வெல சிறிவிபஸ்தி தேரர் தெரிவித்துள்ளார்.
மக்களின் கௌரவத்தை நிலைநிறுத்துவது நீதிமன்றமே. எனவே இந்தக் குற்றப்பிரேரணையை சமர்ப்பிக்காமல் இருப்பதே சிறந்தது என தான் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.
இது சம்பந்தமாக அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

# தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள முஸ்லிம் காங்கிரஸ் தயாராக வேண்டும்
## மு.கா. உயர் பீடத்தில் தீர்மானம்

(கொழும்பு)
தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசைத் தயார் படுத்த வேண்டும் என்று இக்கட்சியின் உயர் அதிகாரிகளும் அரசியல் உறுப்பினர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.
மேலும் சனாதிபதியுடனான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒழுங்குகள் பற்றி தீர்மானிக்கப் பட்டுள்ளதோடு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் காங்கிரசின் உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தி முஸ்லிம் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் ரவூப்ஹக்கீம் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஏனையகட்சிகளுடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும் அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தையும் எதிர்கொள்ளத் தயாராக காங்கிரஸ் உறுப்பினர்கள் கொழும்பிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் சமாதான முயற்சி பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவற்றின் கடமையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.
நேற்று முன்தினம் இரவு 9.30 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 3.00 மணிவரை இக்கூட்டம் நடைபெற்றது.

### பகிர்ந்து...
நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து சனா திபதி சந்திரிகா எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் சனாதிபதியின் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### 19ஆம்....
கும் பிரதமர் ரணிலின் ஆளும் தரப்பு கொடுக்கும் அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு சனாதிபதியின் பொ.ஐ.முன்னணி தலைமையிலான எதிர்த்தரப்பு சிரமப்பட்டுக் கொண்டியிருக்கும். இந்நிலையில் பாராளுமன்றம் திட்டமிட்டது போல் கூடுமா என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சர்வதேச...
தங்களுக்கு அடிபணிந்து உள்நாட்டு அரசியல் வரம்புக்குள் இருக்கக்கூடிய தமது அதிகாரங்களை விட்டுக் கொடுக்க இரண்டு தரப்பும் தயாரா என்பது எதிர்காலம் தான் பதில் சொல்ல வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### வன்னியில்...
உருவாகலாம் என அஞ்சப்படுகின்றது. கிளி. வட்டக்கச்சி வீதியின் ஐந்தடிவான் பகுதியில் நேற்று பிற்பகல் 11/2 அடி உயர வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்ந்தவண்ணமிருந்தது.
அதேபோன்று புதுமுறிப்பு, கோணாவில், வன்னேரி ஜெயபுரம், வீதிகளிலும் வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதன் காரணத்தினால் பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே பயணிகள் போக்குவரத்தினை மேற்கொண்டதனை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.
மேலும் தொடர்ந்து மழை பெய்துவரும் பட்சத்தில் இப்பிரதேசத்திற்கான போக்குவரத்துக்கள் யாவும் தடைப்படக்கூடிய சூழ்நிலை உருவாகலாமென் அஞ்சப்படுகின்றது. (சோ)

### புலிகள்..
வேற்ற முடியாதுவிட்டால் தான் பதவி விலகுவதற்கும் தயாராய் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சி 47 இலட்சம் வாக்குகளைப்பெற்றது. பொதுசன ஐக்கிய முன்னணி கடந்த தேர்தலில் 37 இலட்சம் வாக்குகளைப் பெற்றது. எனவே இரு கட்சிகளும் இணைந்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாக இருந்தால் இன்றைய சமாதான முன்னெடுப்பை சிறந்த முறையில் முன்னெடுத்து இனப்பிரச்சினைக்கு உறுதியான தீர்வொன்றைக் காண முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.
இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று சமாதானத்தை முதலில் முன்னெடுத்தது தானே எனக்குறிப்பிட்ட சந்திரிகா அவ்வாறான சமாதானத்தை முன்னெடுத்த தன்னுடைய கண்ணையே பிரபாகரன் பறித்துவிட்டார் என்றும் எனினும் தான் சமாதானத்துக்காக உழைப்பதினால் இவற்றைக் கருத்திலெடுக்காது தொடர்ந்தும் சமாதானத்துக்காக உழைக்கப்போவதாகவும் தெரிவித்தார். (32)

### இல....
புக்களை உயர்த்தியுள்ளோம். அத்துடன் எந்நிலைமைகளுக்கும் முகம் கொடுக்கும் வகையில் திட்ட மிட்டுச் செயற்படத் தயாராக இருக்க வேண்டியுள்ளது என்றார்.
மேலும், இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடி நிலை குறித்து அவதானத்துடனும், கண்காணிப் புடனும் இருக்குமாறு தமிழக அரசையும் இந்திய மத்தியரசு கேட்டுக்கொண்டுள்ளது.

### விட்டுக்....
திபதி கையேற்ற மூன்று அமைச்சுப் பதவிகளும் திருப்பி ஒப்படைக்கப் படாதவரை சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்கப் போவதில்லை எனவும், சனாதிபதி அழைப்பு விடுத்துள்ள தேசிய நல்லிணக்க அரசில் பங்கேற்கப்போவதில்லை எனவும் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.
இந்நிலையானது, நாட்டில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு ஏற்படுவதற்கு உதவப் போவதில்லை. இந்நிலையில் திடீர் தேர்தல் ஒன்று நடத்துவதைத் தவிர வேறு வழி இருக்கப்போவதில்லை என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

- கிருசாந்தி கொலை வழக்கு -
# மேன்முறையீட்டு மனு இன்று விசாரணை

(கொழும்பு)
கைதடி கிருசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் எதிரிகள் தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆட்சேபித்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை உயர்நீதி மன்றம் இன்று விசாரணைக்கு எடுக்கின்றது.
உயர் நீதிமன்ற நீதியரசர் கலாநிதி சிரானி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர் குழு இந்த வழக்கை விசாரணை செய்யவுள்ளது. குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது. மேல் நீதிமன்ற நீதியரசர்கள் விதித்த இந்தத் தண்டனை சட்டத்திற்கு முரணானது என்று எதிரிகளின் வழக்கறிஞர்கள் மேன்முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்கள்.
இன்று விசாரணை இடம் பெறும் போது சட்டமா அதிபர் தமது வாதத்தை முன்வைக்க இருக்கின்றார்.

### யுத்த....
வித்துள்ளார். யுத்தநிறுத்த உடன் படிக்கை மீறப்படுவதைத் தவிர்ப் பதற்காக உன்னிப்பாகக் கண் காணித்து வருமாறும் அவர் உத்தர விட்டுள்ளார். புலிகள் உட்பட சகல அரசியல் கட்சிகளும் இராணுவக் கட்டுப் பாட்டிலுள்ள பகுதிகளில் பொது வான அரசியல் நடவடிக் கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பலகல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.